
நகர் ஊரமைப்புத்துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

கணக்கம்பாளையம் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், கணக்கம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்: 150/ 1B -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாத பகுதி)



அளவு : 1: 400

இணையதள விண்ணப்ப எண் : S6AUI7GP நாள் : 06.11.2023

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 0.78 ஏக்கர் (அ) 3174.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 12

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடுகள் : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

I.மனைப்பிரிவின் சாலைப்பரப்பு : 1254.51 ச.மீ

(i).ஒதுக்கப்பட்ட வேண்டிய பூங்கா பரப்பு : (3174.00ச.மீ -1254.51ச.மீ)x $\frac{10}{100}$ = 191.95 ச.மீ

(ii).ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு(அ) பூங்கா பரப்பிற்கு ஈடான வழிகாட்டு மதிப்பு தொகை : 193.87ச.மீ (10.10 %)
(மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

II.பொது உபயோகம்:

(i). உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு ├ (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x(0.5/100)
(3174.00ச.மீ -1254.51மீ)x(0.5/100) =9.60ச.மீ

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 60.28 ச.மீ (3.14 %)

(ii).TANGEDCO ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு ├ (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x(0.5/100)
(3174.00ச.மீ -1254.51மீ)x(0.5/100) =9.60ச.மீ

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 52.00 ச.மீ (2.71%)

கட்டிட வரம்பு: 9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 12.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு: 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0மீ முதல் 30.5மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. அரசாணை எண் : 181 வீட்டுவசதி நகர்புறவளர்ச்சிதுறை நாள் 09.12.2020-ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் கணக்கம்பாளையம் ஊராட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீx1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப் படவேண்டும்.

7. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

SWP/ DTCP/ TIRUPPUR /LAYOUT NO. 37/2024

Signature valid
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2024.02.13 12:00:05

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Tiruppur
Date:2024.08.21 15:[illegible]:05

பா.ஜெயராணி
அளவர் / உதவி வரைவாளர்

சு.[illegible]து
வரைவாளர் நிலை-III

வே.பிரேம்குமார்
கட்டட கலை / திட்ட உதவியாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர்.